# வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

## திட்ட முகாமைத்துவ பிரிவு

## மரபுரிமை, மீள்திறன், உள்ளடக்கம் மற்றும் பெறுமதி சார்ந்த வேலைவாய்ப்புக்கான சுற்றுலாத் திட்டம் (THRIVE)

**திட்ட தயார்படுத்தலுக்கான மானிய வசதி (GFPP) – மானிய இல.: E572-LK**

# வெற்றிடங்கள்

மரபுரிமை, மீள்திறன், உள்ளடக்கம் மற்றும் பெறுமதி சார்ந்த வேலைவாய்ப்புக்கான சுற்றுலாத் திட்டமானது (THRIVE) நிறுவன திறன் மேம்பாடு, நிலையான சுற்றுலா, பாரம்பரியப் பாதுகாப்பு, மீள்திறன், சமூக உள்ளடக்கம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் சுற்றுலாத் துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முன்முயற்சி ஒன்றாகும். திட்ட தயார்படுத்தலுக்கான மானிய வசதி (GFPP) – மானிய இல.: E572-LK இன் கீழ் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் (சுற்றுலாத்துறை பிரிவு) வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் 2026.03.28 ஆம் திகதிய 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி திட்டப் பணிப்பாளர் பதவிக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**திட்டப் பணிப்பாளர் பதவி (முழு நேரம்)**

**முக்கிய பணிகள் மற்றும் பொறுப்புகள்**

திட்டப் பணிப்பாளர், வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைவதற்காக திட்டச் செயற்பாடுகளை வழிநடத்துவதற்குப் பொறுப்பானவராவார்.

**தகைமைகள் (கீழுள்ள 1 அல்லது 2)**

2026.03.28 ஆம் திகதிய 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி, விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம்

மற்றும்

- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம், திட்ட முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், பொருளியல் பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணி) அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டம்/ தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து இணை அங்கத்துவம்/ அதனையொத்த தொழில்முறை அங்கத்துவம் ஒன்றைப் பெற்றிருத்தல்

அத்துடன்

- முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது 08 ஆண்டுகள் அனுபவம் அதில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 04 ஆண்டுகள் இருத்தல் வேண்டும்.

அல்லது

2. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்பு ஒன்றில் இருந்து கூட்டு/ சக அங்கத்துவம்

அத்துடன்

முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம் அதில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 03 ஆண்டுகள் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** மாதாந்தம் 330,000 மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

திட்டப் பணிப்பாளர் பதவியானது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அசைச்சு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (MSD) வழங்கப்பட்ட 2026.03.18 ஆம் திகதிய, 02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையதாகும்.

**வயது**

திட்டப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்ப இறுதித் திகதியின்படி விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**விரும்பத்தக்க கூடுதல் அனுபவம்/ தகுதிகள்:**

பின்வருவனவற்றைப் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

- சுற்றுலாத்துறை அபிவிருத்தி, நிறுவன ரீதியான வலுவூட்டல், கொள்கை பகுப்பாய்வு, மற்றும் நிறுவன திறனை கட்டியெழுப்பல் அல்லது மூலோபாய திட்டமிடலில் நிரூபிக்கப்பட்ட அனுபவம்.
- தேசிய மற்றும் மாகாண சுற்றுலா திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுடன் நேரடியாக பணியாற்றிய நடைமுறை அனுபவம்.
- சுற்றுலாத்துறை நிறுவனங்கள், கொள்கை கட்டமைப்புகள், மற்றும் ஒழுங்குமுறைச் சூழல்களை வலுவாகப் புரிந்திருத்தல்.
- வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களை செயற்படுத்திய அனுபவம்.
- கோரிக்கைகளைப் பரிசீலித்தல், பதில்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்பந்த விதிகளைப் பொருள்படுத்துதல் போன்றவற்றில் திறன் பெற்றிருத்தல்.
- Microsoft Office packages மற்றும் MS Project அல்லது திட்டப் பணிப்பாளர்களுக்கான அதற்கு இணையான திட்ட முகாமைத்துவ மென்பொருட்களின் அறிவு.

**பொதுவான விபரம்**

பணியாளர் EPF (ஊழியர் சேமலாப நிதியம்) இற்காக சம்பளத்தின் 8% பங்களிப்பை வழங்குவதோடு, தொழில் வழங்குநர் EPF (ஊழியர் சேமலாப நிதியம்) இற்காக சம்பளத்தின் 10% பங்களிப்பையும் ETF (ஊழியர் நம்பிக்கைப் பெறுப் நிதியம்) இற்காக 3% பங்களிப்பையும் வழங்குவார்.

**பணி நிபந்தனைகள்**

திட்டப் பணிப்பாளர் 2027.02.27 வரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்.

**பணியிடமானது**

திட்ட முகாமைத்துவ பிரிவு<br>
திட்டமிடல் பிரிவு (சுற்றுலாத்துறை பிரிவு),<br>
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,<br>
முதலாவது மாடி, இல. 03, டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி (சேர் ராசிக் பரீட் மாவத்தை), கொழும்பு - 01

**விண்ணப்பம்:**

சுயவிபரக்கோவை, சான்றளிக்கப்பட்ட கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் சேர்த்து விண்ணப்பங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டப் பணிப்பாளருக்கான (GFPP) விண்ணப்பம் என்று குறிப்பிட்டு 2026 செப்டெம்பர் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டக் கணக்காளர், GFPP திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU), வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு (சுற்றுலாத்துறை), இல. 03, பழைய டைம்ஸ் கட்டிடம், சேர் ராசிக் பரீட் மாவத்தை (பிரிஸ்டல் வீதி), கொழும்பு - 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்திற்கு சான்றிதழ்களை இணைத்தல் வேண்டும்.

அரச/ அரச சார்பு துறைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தேவையான தகைமைகள் மற்றும் அனுபவத்தைப் பூர்த்தி செய்த குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர்.

**செயலாளர்**<br>
**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**<br>
**திகதி: 2026.09.07**